


07.04.2025

தலைப்பு செய்திகள்

- வளமான சமுதாயத்திற்கு ஆரோக்கியமான வாழ்வே அடித்தளம் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- நாட்டின் மருத்துவ கட்டமைப்பை வலுப்படுத்த 75 ஆயிரம் புதிய மருத்துவ கல்வி இடங்களை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய அமைச்சர் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.
- ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடம் பாம்பன் பகுதிகளில் 210 கோடி ரூபாய் செலவில் மீன்பிடி துறைமுகங்கள் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- தமிழக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என் நேரு மற்றும் அவரது உறவினர் இல்லங்களில் அமலாக்க துறையினர் இன்று சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.
- Monte Carlo டென்னிஸ் ஆடவர் இரட்டையர் முதல்சுற்றில் Yuki Bhambri, Alexei இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

உலக சுகாதார தினம்

நாட்டு மக்களின் நல வாழ்விற்காக சுகாதாரத்திற்கு உயர் முன்னுரிமை வழங்கி இது சார்ந்த திட்டங்களில் மத்திய அரசின் முதலீடுகள் தொடரும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.

உலக சுகாதார தினத்தை ஒட்டி இன்று பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் ஆரோக்கியமான உலகை உருவாக்க இந்நாளில் உறுதியேற்க அழைப்பு விடுத்துள்ளார்.

வளமான சமுதாயத்திற்கு ஆரோக்கியமே அடித்தளம் என்று பிரதமர் எடுத்துரைத்தார்.

2050ஆம் ஆண்டு வாக்கில் 44 கோடி இந்தியர்கள் உடல் பருமன் நோயால் அவதியுறுவார்கள் என்று ஆய்வுகள் தெரிவிப்பதை சுட்டிக்காட்டி அனைவரும் 10 சதவிகித அளவிற்காவது தத்தம் உணவுகளில் எண்ணை பயன்பாட்டை குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

உடற்பயிற்சியை தங்களது அன்றாட வாழ்வின் அங்கமாக தொடர ஊக்கப்படுத்தியுள்ள பிரதமர் இத்தகைய ஒருங்கிணைந்த முயற்சிகளால் வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கு நாட்டு மக்கள் பங்காற்ற முடியும் என்றார்.

இந்நாளை ஒட்டி நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

************

கஜேந்திரசிங் ஷெகாவத்

நாட்டில் முன்னெச்சரிக்கை சுகாதார நடவடிக்கைகளை பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான அரசு முனைப்புடன் மேற்கொள்வதாக

மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் யோகா ஆரோக்கிய வாழ்விற்கான ஃபிட் இண்டியா இயக்கம் போன்றவற்றின் மூலம் மக்கள் உடற்பயிற்சிகளை மேற்கொள்ள பிரதமர் உத்வேகம் ஏற்படுத்தி இருப்பதாக சுட்டிக்காட்டினார்.

ஊரக பகுதிகளில் நலவாழ்வு மையங்கள் தொடங்கி, எயிம்ஸ் மருத்துவமனைகள் கட்டுமானம் வரை பிரதமர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

நாட்டில் அடுத்த 5 ஆண்டுகளில் 75 ஆயிரம் புதிய மருத்துவ கல்வி இடங்களை ஏற்படுத்தி மருத்துவர்களின் எண்ணிக்கை உயர்வது உறுதி செய்யப்படும் என்றார்.

எயிம்ஸ் மருத்துவ மனைகளின் எண்ணிக்கையும் திறனும் அதிகரித்ததை அடுத்து மருத்துவ சுற்றுலாவின் தலைநகரமாக இந்தியா உருவெடுத்திருப்பதாக அவர் கூறினார்.

குறைந்த செலவிலான மருத்துவத்தை பெற பல்வேறு நாடுகளிலிருந்து மக்கள் இந்தியாவிற்கு வருவதாக திரு.ஷெகாவத் குறிப்பிட்டார்.

************

மன்கீபாத்

பிரதமர் திரு.நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் இம்மாதம் 27ஆம் தேதி 121ஆவது மனதின் குரல் நிகழ்ச்சியில் உரையாற்ற உள்ளார்.

இதுதொடர்பாக பொதுமக்கள் தங்களது எண்ணங்களையும் கருத்துக்களையும், வரும் 25ஆம் தேதிவரை 1800 11 7800 என்ற தொலைபேசி எண்ணிலும், Mygov தளத்திலும் நரேந்திரமோடி செயலி மூலமாகவும் தெரிவிக்கலாம்.

************

கடற்படை மாநாடு

கடற்படை தலைவர்களின் 2ஆம் கட்ட மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்கியது.

4 நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் இந்திய பெருங்கடல் பிராந்தியத்தின் பாதுகாப்பு நட்புறவு நாடாக இந்தியாவை முன்னிறுத்துவதற்கான செயல்பாடுகள் இடம்பெறுகின்றன.

அமைதி, பாதுகாப்பு, நிலைத்தன்மை போன்றவற்றில் கடற்படையினரின் அளப்பரிய சேவையை முன்னெடுத்து செல்லும் வகையிலான ஆலோசனைகள் இடம்பெறுகின்றன.

முப்படைகள் ஒருங்கிணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நடைமுறைகள் குறித்தும் முப்படை தலைவர்கள் இம்மாநாட்டில் எடுத்துரைக்கின்றனர்.

************

சீதாராமன்

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் பிரிட்டன் மற்றும் ஆஸ்திரியா நாடுகளுக்கு அரசு முறை பயணமாக நாளை புறப்படுகிறார்.

இந்நிலையில் ரிசர்வ் வங்கியின் நாணய கொள்கை குழுவின் 3 நாள் கூட்டம் மும்பையில் இன்று தொடங்குகிறது.

நடப்பு நிதியாண்டின் பொருளாதார வளர்ச்சி, பணவீக்க கட்டுப்பாட்டை சமநிலை படுத்துவதற்கான முன் முயற்சிகள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படுகிறது.

வட்டி விகிதங்களை மாற்றி அமைப்பது குறித்தும் இதில் விவாதிக்கப்படுகிறது.

************

முத்ரா கடன்

பிரதமரின் முத்ரா வங்கி கடன் திட்டத்தின் கீழ் இதுவரை 32 லட்சம் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

நிதிசாரா, சிறு, குறு தொழில் நிறுவனங்களுக்கு கடனுதவி வழங்க வகை செய்யும் இந்த திட்டம் 2015ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

சிறு வணிகர்களுக்கு ஆளுமை வழங்கும் வகையிலும், நிதி உள்ளடக்கத்தை கருத்தில் கொண்டும் தொடங்கப்பட்ட இந்த திட்டத்தின் கீழ்

50 ஆயிரம் ரூபாய் வரை சிஷூ கடனும்,

5 லட்சம் ரூபாய் வரை கிஷோர் கடனும்

10 லட்சம் ரூபாய் வரை தருண் கடனும் வழங்கப்படுகிறது.

முத்ரா கடன் திட்டத்தின் கீழ் 70 சதவிகித பெண் தொழில்முனைவோர்கள் பொருளாதார சுதந்திரம் பெற்றுள்ளனர்.

விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி தற்சார்பை எட்ட இந்த திட்டம் வழிகோலியுள்ளது.

SC, ST, OBC பிரிவினர் இந்த திட்த்தின் கீழ் 50 சதவிகிதத்திற்கும் மேல் கடன் பெற்றுள்ளனர்.

இந்த திட்டம் தொடங்கப்பட்ட 10 ஆண்டுகளில் தொழில்முனைவோர் நிலை மேம்பட்டுள்ளதோடு நிதி உள்ளடக்கத்திற்கான உலகின் கவனத்தை இது ஈர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது.

************

Waves

சர்வதேச ஒலி ஒளி பொழுதுபோக்கு உச்சிமாநாடு waves இன் உண்மை உரைக்கும் ஹேக்கத்தான் இறுதி போட்டிகள் தற்போது புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.

ஐந்தாயிரத்து 600க்கும் மேற்பட்ட அணிகள் இந்த ஹேக்கத்தான் நிகழ்ச்சியில் பங்கேற்ற நிலையில் இன்றைய இறுதி போட்டிக்கு 25 அணிகள் முன்னேறியுள்ளன.

வெற்றிபெறும் முதல் 5 அணிகளுக்கு 10 லட்சம் ரூபாய் பரிசுதொகை வழங்கப்பட உள்ளது.

செயற்கை நுண்ணறிவு ஆற்றலை கொண்டு உண்மைகளை கண்டறிந்து, உரிய எச்சரிக்கைகளை சரியான தருணத்தில் வழங்குதை இலக்காக கொண்டு உண்மை உரைக்கும் truth tell hackathon கருவி உருவாக்கப்ட உள்ளது.

நேரலைகளின்போது உண்மையான தகவல்களை நேயர்களிடையே கொண்டு செல்ல இக்கருவி வகை செய்வதோடு வெளிப்படைதன்மையையும் உறுதி செய்ய வழிகோலும்.

************

முதலமைச்சர் 110

மீனவர்கள் ஆழ்கடலில் மீன்பிடிக்க வசதியாக தங்கச்சிமடம் பகுதியில் 150 கோடி ரூபாய் செலவிலும், பாம்பன் பகுதியில் 60 கோடி ரூபாய் செலவிலும் மீன்பிடி துறைமுகங்கள் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் அவை விதி 110ன் கீழ் இன்று அறிக்கை தாக்கல் செய்து பேசிய அவர் 15 ஆயிரத்து 300 மீனவர்களுக்கு மீன் மற்றும் மீன் சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்புகளுக்கு பயிற்சி வழங்கப்படும் என்றார்.

மீனவர்களின் நலனுக்காக மாற்று தொழில்களை ஊக்குவிக்கும் வகையில் மீன்களை பதப்படுத்துதல், உலர்த்துதல், போன்ற தொழில்நுட்ப பயிற்சிகள் அளிக்கப்படும் என்றார்.

இதற்காக 10 கோடி ரூபாய் செலவிடப்படும் என்றும், இதன்மூலம் 2 ஆயிரத்து 500 மீனவ குடும்பங்கள் பயன்பெறும் என்றும் குறிப்பிட்டார்.

வாய்ஸ்

************

சட்டப்பேரவை கேள்வி நேரம்

பசுமை பரப்பினை அதிகரிக்க முதல்முறையாக தமிழ்நாட்டில் இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாக வனத்துறை அமைச்சர் திரு.க.பொன்முடி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர் 10 ஆண்டுகளில் 265 கோடிமரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டு தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் இந்த பணிகள் மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

75 கோடி ரூபாய் செலவில் 80 மரகத பூஞ்சோலைகள் தோற்றுவிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கடற்கரை பகுதிகளை புயல் போன்ற இயற்கை சீற்றங்களிலிருந்து பாதுகாக்க பனை, முந்திரி, சவுக்கு போன்ற மரங்கள் நடப்படுவதாகவும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழலை பாதுகாக்க வனத்துறை உள்ளிட்ட அனைத்து துறைகளின் மூலமாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறிய அமைச்சர் 650 ஹெக்டேர் பரப்பளவில் அலையாத்தி காடுகளை தோற்றுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார்.

நகர்புற வனங்களை மீட்க ஆதி வனம் மேம்பாட்டு திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

காடுகளின் வளர்ச்சியை 33.3 சதவிகிதமாக உயர்த்த அனைத்து விதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எடுத்துரைத்தார்.

மற்றொரு கேள்விக்கு பதில் அளித்த மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் சென்னை அருகே உள்ள போரூர் ஏரியை ஆழப்படுத்த 63 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

************

முத்துசாமி – கொள்கை குறிப்பு

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சார்பில், 60 இடங்களில் சிதிலமடைந்துள்ள 10 ஆயிரம் வாடகை குடியிருப்புகளில் ' மறு கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்படும் என்று மாநில வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.முத்துசாமி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று தமது துறை மானியக்கோரிக்கையில் இதனை தெரிவித்த அவர் சென்னை, திருச்சி, தஞ்சை உள்ளிட்ட 12 இடங்களில் 728 கோடி ரூபாய் மதிப்பில், 2 ஆயிரத்து 414 குடியிருப்புகள் கட்டப்படும் என்றார்.

மாநிலத்தில், வீட்டுவசதி துறையின் கீழ் விற்பனையாகாமல் உள்ள மனைகள், அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக அலகுகளை விற்பனை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

இதன்மூலம், ஆயிரத்து 130 கோடி ரூபாய் வருவாய் ஈட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

************

அஇஅதிமுக வெளியேற்றம்

தமிழக சட்டப்பேரவையிலிருந்து அஇஅதிமுக உறுப்பினர்கள் இன்று வெளியேற்றப்பட்டனர்.

பேரவையில் இன்று கேள்வி நேரத்திற்கு பின்னர் எதிர்கட்சி தலைவர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி நீதிமன்றத்தில் உள்ள ஒரு பிரச்சினையை எழுப்ப முயன்றார்.

இதற்கு பேரவைத்தலைவர் திரு.அப்பாவு அனுமதி மறுத்ததை தொடர்ந்து, அஇஅதிமுகவினர் அமளியில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்பட்டதாக கூறி அவைதலைவர் அஇஅதிமுகவினரை இன்று ஒருநாள் மட்டும் அவையிலிருந்து வெளியேற்ற அவைகாவலர்களுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

பின்னர் சட்டப்பேரவைக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி வலுவான ஆட்சியை முன்னெடுத்து செல்ல திமுக அரசு தவறிவிட்டதாக குற்றம் சாட்டினார்.

கட்ச தீவு மற்றும் மீனவர் பிரச்சனையில் திமுக இரட்டை வேடம் போடுவதாக குறை கூறினார்.

இந்நிலையில் முதலமைச்சர் விடுத்த வேண்டுகோளை ஏற்று, அஇஅதிமுக உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளில் பங்கேற்க பேரவைத்தலைவர் திரு.அப்பாவு அனுமதித்தார்.

இதையடுத்து அஇஅதிமுக உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளில் பங்கேற்றனர்.

************

கே.என்.நேரு - அமலாக்கத்துறை

தமிழக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என் நேரு, அவரது மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.அருண் நேரு மற்றும் நேருவின் சகோதரர்களின் இல்லங்கள் என 15க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்க துறை அதிகாரிகள் இன்று சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கோவை சேலம் சென்னை திருச்சி உள்ளிட்ட பகுதிகளில் இன்றுகாலைமுதல் திருநெல்வேலி கோவை பகுதிகளை சேர்ந்த அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் கதிரவன் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

நெல்லை

மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் பெய்துவரும் கன மழை காரணமாக களக்காடு தலையணையில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று ஐந்தாயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

************

வானிலை

தென் கிழக்கு வங்ககடலில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக காற்றழுத்த தாழ்வுபகுதி இன்று உருவாகியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது நாளை வடமேற்கு திசையில் நகர்ந்து அடுத்த 48 மணி நேரத்தில் மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளில் நிலவக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

இதன்காரணமாக தென் மற்றும் வட தமிழகத்தின் ஒரு சில பகுதிகளிலும் ராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களிலும் கன மழைக்கு வாய்ப்புள்ளதாக இம்மையம் கூறியுள்ளது.

************

ஆழித்தேரோட்டம்

திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோவில் ஆழித்தேரோட்டம் இன்று காலை தொடங்கி பக்தி சிரத்தையுடன் நடைபெறுகிறது.

************

டென்னிஸ்

மொனாகோவில் நடைபெறும் Monte Carlo டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் முதல்சுற்றில்: இந்தியாவின் Yuki Bhambri, ஆஸ்திரேலியாவின் Alexei இணை – ஆஸ்திரேலியாவின் Alex, ஜெர்மனியின் Jan-Lennard இணையை இன்று எதிர்கொள்கிறது.

************

கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் மும்பையில் இன்று இரவு ஏழரை மணிக்கு மும்பை இண்டியன்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருவை எதிர்கொள்கிறது.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

************